முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 05.11.2025

O.S. No. 324/2017

வா.சா. 1- வைகுண்ட வாசகம்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

செல்லம் நாடார் பெயருக்கு கிரையம் பெற்ற சொத்து எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 97 ½ சென்ட் ஆகும் . அது 1 ஏக்கர் 95 செ ன்ட்டின் ஒரு பகுதி என்றால் சரி. அந்த ரிசர்வே எண்கள் 188/2,35,6 என்று தாவா சொத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 3,4,5,6 உட்பிரிவு செய்யப்பட்ட சொத்துக்கள் 1 ஏக்கர் 95 சென்டின் கி ழக்கு பாதி என்றால் சரி. பாதி என்ற விவரம் எனக்கு தெரியாது.

எனது அப்பா கிரையம் பெற்ற ஆவணத்தில் 1 ஏக்கர் 95 சென்ட்டின் மேற்கு பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுத்து படிக்க தெரியவில்லை. இந்த ஆவண்த்ததை தமிழாக்கம் செய்து தெளிவாக எழுதுவதற்கு ஆவண ஏழுத்தாளரிடம் நான் கொடுத்துள்ளேன் அது கிடைத்தவுடன் நான் பார்த்து சொல்கிறேன். மேற்படி ஆவணங்கள் 299/1954 கிரைய ஆவணத்தில் வடிவீஸ்வரம் பகுதியில் கோட்டார் தெற்கு காடு 4 ம் கண்ணார் 2,3 இலக்கங்களில் பண்டார ஒற்றி இனாம் சர்வே 443 ல் நம்பரில் 1 ஏக்கர் 95 சென்ட்லுள்ள இருப்பு பூ நிலத்தில் நின்று கூறி மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு படிக்க முடியவில்லை என்று கூறுகிறார்.

1 ஏக்கர் 95 சென்று நிலத்தில் மேற்கணைய 97 ½ சென்ட் என்று கிரையஆவண்த்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. பழைய சர்வே எண் 443 ல் புல ஒப்புமை பார்த்துள்ளேனா எ ன்றால் இல்லை. என்னுடைய சொத்திற்கு கிழக்கணைய பகுதியை ஆராய்ந்து அளந்து அதன் விஸ்தீரணம் பார்த்துள்ளேனா என்றால் அடுத்தவர் நிலத்தை நான் பார்க்க முடியாது. எனது அப்பா கிரைய நிலத்தையும் அதற்கு கிழக்கணைய இடத்தையும் இடத்தையும் சேர்ந்து அளந்தால் தான் 1 ஏக்கர் 95 சென்ட்டை அறுதி செய்யமுடியும் என்றால் சரியல்ல.

எங்கள் இடத்தில் நான்கு புறமும் வேலிகள் உள்ளதா என்றால் இல்லை. 4 பக்கமும் மரங்கள் வளர்த்து வேலிகளாக உள்ளது. மண்கட்டை வைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. வா.சாஆ 1 ஆவணத்தின் அசல் கடனில் உள்ளது. 188/2 ல் மொத்தம் விஸ்திரணம்

எவ்வளவு என்றால் தெரியாது. 188/2 க்கு 1 ஏக்கர் 95 சென்ட் என்பது தவறு என்றால் சரியல்ல. ரிசர்வே எந்த வருடத்தில் இருந்தது கடைபிடிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 443/1 ல் உள்ள சொத்தில் வடக்கணைய பங்கில் இருந்து தெற்கணைய பங்கில் தண்ணீர் செல்வதற்கும் நடைபாத்தியமும் போக்குவரத்து பாதையும் வா.சா.ஆ 1 ல் வழங்கப்பட்டது என்றால் தண்ணீர் போக்குவரத்து வழங்கப்பட்டது,.

அந்த தெற்கணைய பங்கில் நீதிமன்ற ஆணையர் கால் இருப்பதாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அந்த கால்வாய் கிடப்பில் இல்லை என்றால் சரி. அந்த உயில் படி நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. நானும் தம்பியும் அந்த உயில் படி நடந்து வருகிறோம் . அந்த கால்வாய் எவ்வளவு அகலத்தில் எவ்வளவு நீளத்தில் உள்ளது என்றால் காலே இல்லை. உயிலில் எழுதி உள்ளார்கள் கால் இல்லாமல் தண்ணீர் செல்லும். கால் ஸ்தலத்தில் இல்லை.

என்னுடைய சொத்தின் வழியாக தண்ணீர் செல்லவில்லை. என்னு டைய சொத்தில் போர் அமைத்து வாழை வைத்து தண்ணீர் பாய்த்து வருகிறேன். வா.சாஆ 1 ல் 13 வது நிபந்தனை என்ன என்றால் தெற்கணைய பகுதியில் மேற்கற்றத்தில் ஒரு கால் போட்டு அதன் வழியே வடக்கணைய பகுதியிலிருந்து தண்ணீர் செல்வதற்கு தெற்கு பகுதியில் உள்ள நபர் தடஸ்தம் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டுள்ளது. எனது தம்பி வடக்கு பகுதியில் உள்ளார் அவர் விவசாயம் செய்யததால் தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்டுகிறது.